DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C. C. No. 270 /2025 |
| Prosecution Witness | : | P.W. 1 |
| List of witness | : | L.W.2 |
| Name | : | விஜயகுமார் |
| Father's /Husband Name | : | கோபால் |
| Village | : | நீடாமங்கலம் |
| Taluk | : | நீடாமங்கலம் |
| Age | : | 49 |
| Occupation | : | தலைமைக்காவலர் நீடாமங்கலம் காவல் நிலையம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 22th January, 2026
Accused present.

**முதல் விசாரணை:-**

நான் நீடாமங்கலம் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 03.07.2018-ம் தேதி மதியம் 12.00 மணியளவில் பேரளம் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்த போது காவல் உதவி ஆய்வாளர் மாதரசி ஸ்டெல்லாமேரி என்பவருடன் நானும், தலைமைக்காவலர் அய்யாசாமி என்பவரும் மதுவிலக்கு அலுவலாக பேரளம் காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட திருமாளம் பேருந்து நிறுத்தம் அருகே எதிரியின் வீட்டின் பின்புறம் கண்காணித்து வந்தபோது சந்தேகம்படும்படியாக நின்றுகொண்டிருந்த ராஜாமணி, த/பெ. ரஜேந்திரன் காலனித்தெரு, திருமாளம் என்பவர் நின்றுகொண்டிருந்த இடத்தை சோதனை செய்த போது சுமார் 15 லிட்டர் பிடிக்கக்கூடிய 11 பாலிதீன் பைகளில் தலா 10 லிட்டர் வீதம் மொத்தம் 110 லிட்டர் பாண்டி சாராயம் இருந்தது. அதை முகர்ந்து பார்க்க ஒருவித விஷநெடியுடன் கூடிய வாடை இருந்தது. மேற்படி பாண்டி சாராயத்தை வைத்திருக்க அவரிடம் எவ்வித அரசு அனுமதியோ, உரிமமோ இல்லாததால் எதிரியை காரணம் கூறி உதவி ஆய்வாளர் கைது செய்தார். பின்பு, தனி நபர் சாட்சிகள் யாரும் சாட்சியாக இருக்க முன்வராததால் எங்கள் முன்னிலையில் அவரிடமிருந்த தடயத்தை 12.15 மணிக்கு கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், அய்யாசாமி என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடத்தில் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி

கையொப்பம் என்னுடையது தான். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் உதவி ஆய்வாளர் ஆய்வாளர் உத்தரவுப்படி பிரிவு 32 TNP Act ன் கீழ் கைப்பற்றப்பட்ட தடயங்களை சம்பவ இடத்திலேயே கொட்டி அழித்தார். அந்த இடத்தில் தயார் செய்த அழிப்பு மகஜில் நானும், அய்யாசாமி என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் அழிப்பு மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த அழித்தல் மகஜர் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு, எதிரியுடன் 13.00 மணிக்கு காவல் நிலையம் வந்து குற்ற எண்.288/2018 சட்டப்பிரிவு 4(1) (aaa) r/w 4(1–A) TNP Act –ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். மேற்படி வழக்கில் புலன் விசாரணைக்கு அவருக்கு நான் உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :

நான் சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில் காவல் ஆய்வாளருடன் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றாலும், எதிரியிடமிருந்து எவ்வித சாராயத்தையும், கைப்பற்றவில்லை என்றாலும், எதிரியை சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றாலும் சரியல்ல. கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழித்தல் மகசர் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டதில் காவல் ஆய்வாளர் எனது உயரதிகாரி என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்காக சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. வழக்கானது புள்ளி விவரத்திற்காக போடப்பட்டது என்றாலும், அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை**</u>

இல்லை.

M S BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
Date: 2026.01.22 12:37:50 +0530